வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை
ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5.

**கூடுதல் தலைமை செயலர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை: திரு. க. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப.,**

செ.மு.ஆ.எண். ஆ.கு. 3/19145/2017 நாள். 27.08.2021.

பொருள்: கருணை அடிப்படையில் பணி நியமனம் – வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையில், அலுவலக உதவியாளராகப் பணியாற்றி, பணியிடையே 07.09.2016 அன்று காலமான திரு.மு.அன்பழகன் என்பவரின் மகன் திரு.எம்.ஏ.முகேஷ் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டது – பணி வரன்முறை செய்து ஆணையிடுதல் – தொடர்பாக.

பார்வை:
1. இணை ஆணையர் (வ.நி) அவர்களின் செயல்முறை ஆணை எண். அ.ந.1(1)/002/2018, நாள்.16.10.2018
2. இவ்வலுவலக அ.சா.கு. எண். அ.ந.1(1)/35539/2019, நாள்.11.12.2019.
3. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை, நாள்.26.02.2021.
4. அரசுக் கடித எண்.9694/பணி9(2)/2021–3, நாள்.28.06.2021.

*******

**ஆணை:**

வருவாய் நிர்வாக பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கும் துறையில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றி பணியிடையே 07.09.2016 அன்று காலமான திரு.மு.அன்பழகன் என்பவரின் மகன் திரு.எம்.ஏ.முகேஷ் என்பவருக்கு பார்வை –1ல் காணும் இணை ஆணையர் (வ.நி) அவர்களின் செயல்முறைகளின்படி கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டு 22.10.2018 முற்பகல் இவ்வாணையரகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை –3ல் காணும் அரசாணை மற்றும் பார்வை –4ல் காணும் அரசுக் கடிதத்தில், 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்த வித விதித்தளர்வும் தேவைப்படாத பணியாளர்களுக்கு சம்பந்தப்பட்ட பணிநியமன அலுவலர்களின் (Appointing Authority) ஒரு நிலை கூடுதல் அதிகாரம் பெற்ற அலுவலர்கள் (one level higher than the appointing authority), அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்திட உரிய செயல்முறை ஆணை வெளியிட்டு தொடர்புடைய அரசுப்பணியாளரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) எனவே, மேற்படி பார்வை 3–ல் காணும் அரசாணை மற்றும் பார்வை 4–ல் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கிணங்க, திரு.எம்.ஏ.முகேஷ்

என்பவருக்கு இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 22.10.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

4) மேலும், தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ள உதவி ஆணையர் – 3 க்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/–க.பணீந்திர ரெட்டி,
கூடுதல் தலைமை செயலர்/
வருவாய் நிருவாக ஆணையர்

பெறுநர்:
திரு. எம்.ஏ.முகேஷ், (இளநிலை உதவியாளர்)
வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,சென்னை–5.

நகல்:
1. உதவி ஆணையர் – 3
வருவாய் நிருவாகம் மற்றும்
பேரிடர் மேலாண்மை ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 5. (தக்க பதிவுகள் மேற்கொள்ள)
2. இருப்புக் கோப்பு
3. அரசு முதன்மைச் செயலர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (பணி–9)துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.

B. Kalay...
கூடுதல் தலைமைச் செயலர்/
வருவாய் நிருவாக ஆணையருக்காக.

28/08/21